Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

09.09.2021

## உலகச் சாதனை விழா

மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் **ஏ.பி.ஜே.அப்துல்கலாம்** அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகமும், சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் நாட்டுநலப் பணித்திட்டம் மற்றும் Internal Quality Assurance Cell –ம் இணைந்து உலகச் சாதனைக்காக 08.09.2021 அன்று காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை 12.00 மணிநேரத் தொடர் நிகழ்வுகள் சிறப்பாக நடத்தப்பட்டன. இந்நிகழ்வின் தொடக்கவிழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து,** பொருளாளர் **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** ஆகியோர் கலந்து கொண்டு உலகச் சாதனை நிகழ்ச்சியின் முதல் நிகழ்வாக நாட்டுநலப் பணித்திட்டம் சார்பாக மரக்கன்றுகள் நட்டுச் சிறப்புச் செய்தனர்.

நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக, யோகா பயிற்சி **டாக்டர் ப.எழில்மாறன்** முன்னிலையில் நடைபெற்றது. அடுத்தடுத்த நிகழ்வாக நுண்ணுயிரியல் ஆய்வுத் துறை சார்பாக உயிரியல் நுட்பங்களைப் பயன்படுத்தி கழிவுகளைப் பயனுள்ள தயாரிப்புகளாக மாற்றுவது பற்றியும், வேதியியல் ஆய்வுத்துறை சார்பாக இயற்கை சானிடைசர் செய்வது பற்றிய செயல்விளக்கம் குறித்தும், உயிர் தொழில்நுட்பவியல் துறைச் சார்பாக கரிம உள்ளீடு, நுட்பங்கள் பற்றியும், உயிர் வேதியியல் துறைச் சார்பாக உயிரியல் கண்டறிதல் பற்றியும் விளக்கப்பட்டன.

நாட்டுநலப் பணித்திட்டம் சார்பாக விதைப் பந்துகள் செய்வது பற்றிய செய்முறை விளக்கங்களும், தகவலமைப்பு மேலாண்மைத் துறைச் சார்பாக வன்பொருள் மற்றும் மென்பொருள் நிறுவல் பற்றிய செயல் விளக்கமும், கணித ஆய்வுத்துறைச் சார்பாகக் கணித வினாடிவினா போட்டியும், கணினி அறிவியல் ஆய்வுத்துறைச் சார்பாகப் போட்டோஷாப் மற்றும் மொபைல் பயன்பாடு மேம்பாடு பற்றிய செயல்விளக்கம் பற்றியும், உடற்கல்வித் துறைச் சார்பாகக் குத்துச்சண்டை, மல்யுத்தம், சிலம்பாட்டம் மற்றும் மல்லர்கம்பம் பற்றிய செயல்விளக்கமும், மின்னணுவியல் துறைச் சார்பாக மின்னணுக் கருவி மூலம் இயற்கை மாசுபாடு பற்றிய செயல்விளக்கமும், ஆங்கில ஆய்வுத்துறைச் சார்பாக இயற்கை சார்ந்த நாடகமும், இறுதியாகத் தமிழாய்வுத் துறைச் சார்பாக கவிதை, பட்டிமன்றம், நடனம், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிறைவு விழாவில் சென்னை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.**என்.பஞ்சநாதன்**, கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர், பொருளாளர், கல்விப்புல முதன்மையர், முதல்வர், துணைமுதல்வர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்


NSS